1972 ஆகஸ்டு 18]

அடிப்படையாக வைத்து ஊராட்சி மன்றங்களைக் கண்காணித்து வருகிற இயக்குநர் திட்டம் தீட்டி வருகிறார்கள். அந்த வகையில் ஆராயப்படலாம்.

திரு. நா. வீராசாமி அவர்கள் எழுந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் விடை மிகவும் விளக்கமாக இருக்கிறது. இதற்கு மேல் துணைக் கேள்விகளுக்கு அவசியமில்லை என்று நினைக்கிறேன். ஒரு கேள்வி கேளுங்கள்.

திரு. நா. வீராசாமி: எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல் இரண்டு மூன்று கிராமங்களை ஒன்றாகச் சேர்த்துத் தேர்தல் நடத்தினால் யார் தலைவராக வருகிறார்களோ அவர்கள் ஊர் மட்டும்தான் கவனிக்கப்படும் என்ற நிலையில் ஏற்கனவே அதைப் பரிசீலனை செய்துதான் தனித்தனியாகப் பிரிந்திருக்கிறார்கள். ஆகவே அதை மனதில் வைத்துக் கொண்டு இப்போது இருக்கிற முறையையே நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனியாக இயங்கலாம் என்ற அளவிலும், இரண்டு மூன்று கிராமங்களை ஒன்று சேர்த்து அமைக்கலாம் என்பதற்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன. சிலயிடங்களில் தனித்தனியாகப் பிரிய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் உள்ளன. சிலயிடங்களில் சேர்ந்து இயங்குவதற்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன. ஆனால் ஒவ்வொரு ஊராட்சி மன்றமும் தன் காலிலேயே நிற்கத்தக்க அளவில் அமைய வேண்டும் என்பதுதான்.

Pension for employees of Local Bodies

* 154. *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Municipalities including the Corporation of Madurai have passed resolutions granting pensions to employees who retired before 14th January 1970;

(*b*) if so, the details of the same; and

(*c*) the probable date of implementation of the same?

[1972 ஆகஸ்ட் 18

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) & (உ) : நகராட்சிப் பணியாளர்களுக்கும், மதுரை மாநகராட்சிப் பணியாளர்களுக்கும் முறையே நகராட்சி நிதியிலிருந்தும் மாநகராட்சி நிதியிலிருந்தும் தனி ஓய்வூதியம் வழங்கும் கருத்து அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : 14—1—70-க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கெல்லாம் பென்ஷன் கொடுப்பதற்கு முடிவு எடுத்ததற்குப் பின்னால் அதற்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க ஒவ்வொரு நகராட்சிக்கும் சுற்றறிக்கை விடப்பட்டது. அதன் அடிப்படையில் மதுரை, தூத்துக்குடி போன்றயிடங்களில் ஏற்கனவே கிடைத்த வருவாயில் 16-ல் 7 பங்கு கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். இப்படி முடிவு செய்யப்பட்ட அந்த நகராட்சி மன்றங்களில் உடனடியாக பென்ஷன் கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 14—1—1970-க்கு முன்னால் இருப்பவர்கள்—அதற்குப் பிறகுதான் ஒருமுறையின்கீழ் கொண்டு வந்து ஓய்வு ஊதியம் தரப்பட்டது. அதற்கு முன்னால் உள்ளவர்கள்—ப்ராவிடன்ட் பண்ட் போன்றவை வாங்கிக் கொள்வது என்ற முறையில் ஒவ்வொரு நகராட்சி மன்றமும் ஒப்புதல் அளித்தால் செய்யலாம் என்று எல்லா மன்றங்களிடமும் கேட்கப்பட்டது. பெரும்பாலான நகராட்சி மன்றங்கள் அப்படிப் பட்டவர்களுக்கு அட்ஹாக் பேசிசில் ஓய்வு ஊதியம் தரவேண்டுமென்று ரூ. 25 அல்லது 25 சத விகதம் என்ற அளவில் கொடுக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கொடுக்கலாம் என்பதற்கான முடிவு எடுக்கிறபோது அனைவருக்கும் ஓய்வு ஊதியம் வழங்கப்படலாம் என்று முடிவு செய்கிறபோது ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் ஒவ்வொரு பேசிசில் இருக்குமானால் அது சரியாக இருக்காது. மதுரையில் எட்டில் மூன்று பங்கு என்றோ அல்லது நாற்பது ரூபாய் என்றோ இருக்கிறது. ஒன்றில் ஒன்றாகவும் வேறு ஒன்றில் வேறுவிகிதமாகவும் இருக்கக்கூடாது. சில ஊராட்சி மன்றங்கள் தங்கள் நிதிவசதியையொட்டி அப்படிக் கொடுக்க இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். பெரும்பாலானவை ரூ. 25 அல்லது 25 சத விகிதம் அளவில் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.